# வானத்தில் மனுஷகுமாரனுடைய அடையாளம்

அப்பொழுது மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானங்கள் மேகங்கள் மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். (மத் 24:30).

எஜமானுடைய இந்தத் தீர்க்கத்தரிசனத்தின் சம்பந்தமாக வெவ்வேறான கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. அந்த அடையாளமாக, ஆகாயத்தில் ஒரு சிலுவை தோன்றும் என்று சிலர் யூகிக்கிறார்கள். மனுஷகுமாரனாகிய இயேசு கிறிஸ்து தாமே பெரிய பயத்தையும் திகைப்பையும் உண்டுபண்ணிக்கொண்டு ஏதோ ஒரு மிக கோபமான தோற்றத்தில் மனுஷருக்குத் தோன்றுவார் என்று மற்றவர்கள் எண்ணுகிறார்கள். அவருடைய இரண்டாம் வருகையின் முதல் நிலையாகிய பருஷியாவை (வந்திருத்தலை) மனுஷகுமாரனுடைய வானத்தில் காணப்படும் அடையாளம் என்று நாம் சொல்ல முடியாது. ஏனென்றால், இந்நிலையில் கிறிஸ்துவின் வந்திருத்தல் பொதுவாக இவ்வுலகிலுள்ள கோத்திரங்களுக்கு அல்லது வம்சங்களுக்கு அறிவிக்கப்படுவதில்லை. ஆனால் வேதாகம சத்தியமும் காலங்களின் அடையாளங்களும் தெளிவுபடுத்தப்பட்டதின் காரணமாக கிறிஸ்துவின் சபையாக மிகவும் பரிசுத்தமுள்ள ஜனங்களுக்கு மாத்திரம் அறிவிக்கப்படுகிறது. (லூக்:12:37; வெளி 3:14-20). ஆகையால் பேர் சபைக்கும் உலகத்தருக்காகவுமுள்ள மனுஷகுமாரனுடைய அடையாளம் அவருடைய இரண்டாம் வருகையின் இரண்டாவது நிலையான அவருடைய எபிபெனி காலத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. மகா உபத்திரவத்தில் ஏற்படுகிற நியாத்தீர்ப்பின் ஜுவாலித்து எரிகிற அக்கினியில் அவர் தம்மை வெளிப்படுத்துவார். இந்த வெளிப்படுத்தலை முடிவாக எல்லா மனுக்குலத்தாரும் அடையாளம் கண்டு கொள்வார்கள் (2தெச 1:7-9).

“அடையாளம்” என்ற வார்த்தை அகன்ற அர்த்தத்தைக் கொண்டதாக இருக்கிறது. உதாரணமாக, ஜனங்கள் மெல்லிய கருப்பு பட்டுத்துணி துண்டை சட்டையில் குத்திக்கொள்ளுகிறார்கள். இது துக்கம் கொண்டாடுதலுக்கு அடையாளம். சிலுவை கிறிஸ்தவ மதங்களுக்கு அடையாளமாக இருக்கிறது. பிறைச் சந்திரன் முகம்மதிய மதத்திற்கு அடையாளம். இன்னொரு விதமாக சொல்ல வேண்டுமானால், அடையாளம் ஏதோ ஒன்றை சுட்டிக்காட்டுகிறது. ஆகையால், பேர் சபை, உலகத்தார் ஆகிய இவர்கள் புலம்பத்தக்கதாக மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும் என்று நாம் வாசிக்கும்போது, தம்முடைய இரண்டாம் வருகையில் வந்துள்ள, இயேசு மகா வல்லமையை தம்மிடம் எடுத்துக்கொண்டு இராஜ்யபாரம் பண்ண

ஆரம்பித்து விட்டார் என்பதை அவர்களுக்கு சுட்டிக்காட்ட ஏதோ ஒன்று அடையாளமாக நேரிடும் என்பதுதான் சரியான கருத்து. ஆக்கினையைச் செலுத்த மனுஷகுமாரன் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடு அவர்களுக்கு வெளிப்பட இருப்பதினால் இந்த அடையாளம் ஆக்கினையின் ஏதோ ஒரு அடையாளமாக இருக்க வேண்டும். அநீதிக்கும் அநீதி செய்கிறவர்களுக்கும் எதிராக தேவனுடைய ஆக்கினை ஏற்பட்டிருக்கிறது என்பதை சுட்டிக் காட்டுகிற அடையாளமாக இருக்க வேண்டும். (ஏசா 59:17,18 63:1-6).

இப்பொழுது ஒரு கேள்வி எழுகிறது. இப்படிப்பட்ட ஒரு அடையாளம் அல்லது சுட்டிக் காட்டுகிற காரியம் எப்படி ஆகாயத்தில், வானத்தில் தோன்றும்? இதன் கருத்து என்ன என்று வேதாகமத்திலிருந்தே அறிந்து கொள்வது அவசியம். பூமி, வானம், மலை, கடல் முதலிய வார்த்தைகளை வேதாகமம் அடிக்கடி அடையாளமாக அல்லது தத்ருபப் பொருளாக, உபயோகிகிறது. என்பதை நாம் ஞாபகத்தில் வைப்போமாக. பூமி, அமைக்கப்பட்ட சமுதாயத்துக்கு அடையாளமாக இருக்கிறது (மத் 5:13; ஆதி 11:1). இந்த அமைக்கப்பட்ட சமுதாயத்தின் முதுகெலும்பைப்போல, மலைகள் ராஜ்யங்களுக்கு அடையாளமாக இருக்கின்றன (ஏசா 2:2,4) சமுத்திரம், சமுதாய 'பூமியை' விழுங்கத் தொடர்ந்து வகைத்தேடுகிற அமைதியற்ற மனித வர்க்கத்தின் எண்ணற்றவர்களுக்கு அடையாளமாக இருக்கிறது (சங் 46:2,3; 107:24-30). வானம் உலகத்தின் ஆளும் அதிகாரங்களுக்கும் மதங்களின் ஆதிக்கங்களுக்கும் அடையாளமாக இருக்கிறது (வெளி 6:14; 20:11) வானத்தில் தோன்றுகிற அடையாளம் நம் நாட்களிலுள்ள உலக மத சம்பந்தமான ஏற்பாடுகளுக்கு சம்பவிக்கிற கிறிஸ்துவின் நியாயத் தீர்ப்புகளைக் குறிக்கிறது. நியாயத்தீர்ப்புகளின் ஜுவாலித்து எரிகிற அக்கினி முதலாவது மத சம்பந்தமான விவகாரங்களிலும் வட்டாரங்களிலும் வெளிப்படுகிறது.

ஒரு புது உலக அரசாங்கம் அதிகாரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறது என்கிற எண்ணத்துக்கும், நீதியைத் தூக்கு நூலாக ஆக்கும் சட்டமே அதன் கொள்கையாக இருக்கிறது என்கிற எண்ணத்துக்கும் மனித சமுதாயம் படிப்படியாக விழிப்படையும் (ஏசா 28:17). மனிதனின் விழுந்து போன நிலைமையின் காரணமாக அநீதி எங்கும் இருக்கிறதால், முழு உலகத்தின் மனசாட்சியும் விழிப்படையும், தூண்டப்படும். பயமும் திகிலும் எவ்விடத்திலும் எல்லா வகுப்பார் மேலும் வரும். இந்த பயம் கிறிஸ்துவின் நீதியுள்ள நியாயத்தீர்ப்பின் ஆரம்ப அடையாளத்தை மத சம்பந்தமான வட்டாரங்கள் பார்த்ததால் மட்டுமல்ல, நியாயத்தீர்ப்பில் அவர் சமீபத்தில் நெருங்கி வந்துக் கொண்டிருப்பதைக் கண்டு கொள்வதின் காரணமாகவும் ஏற்படும். தாங்களும் சீக்கிரத்தில் அதில் மாட்டிக்கொள்ளப் போகிறோமே என்று கண்டு கொள்ளுவார்கள். ஆகவே அவர் நிமித்தமாக புலம்பல்

உண்டாகும் (வெளி 1:7). மேலும், மேசியாவைப்பற்றியும், அவருடைய இரண்டாம் வருகையின் நோக்கம் என்ன என்பது பற்றியும், இராஜ்ஜியம் என்றால் என்ன என்பது பற்றியும் பொதுவாக பூமியின் கோத்திரத்தாருக்கு தவறான கருத்துக்கள் இருக்கின்றன என்பதை நாம் ஞாபகத்தில் வைப்போமாக. இருண்ட யுகங்களின் சமயத்தில் சபையின் கோட்பாடுகளுக்குள் கொண்டு வரப்பட்ட பிசாசுகளின் உபதேசங்கள் தேவனுடைய வார்த்தையை அவ்வளவு தூரம் ஒன்றுமில்லத்தாகச் செய்திருப்பதால், மனுக்குலத்தின் பெரும்பான்மையான ஜனங்கள் தேவனை, நன்மையான எந்த ஈவையும் பூரணமான எந்த வரத்தையும் கொடுக்கிறவரும் எல்லாக் கிருபைக்கும் தேவனும், இரக்கங்களின் பிதாவுமானவர் என்று உணர்ந்து கொள்ளுவதற்கு பதிலாக, அவருக்கு பயப்படவும் அவரைத் தங்களுடைய சர்வவல்லமையுள்ள விரோதியாக பாவித்து அவரிடத்தில் அச்சம் கொள்ளுகிறார்கள். (1தீமோ 4:1; 2கொரி 1:3,4 யாக் 1:17). தேவ தயவைக்கண்டு நியாயத்தீர்ப்புகள் பூமியை சூழ்ந்து கொள்ளுகிறதை மனுஷர் தெரிந்து கொள்ளும்போது அவர்களுடைய இருதயத்தில் ஏற்படுகிற பயங்கரமான அச்சம் அவர்களை அழுகைக்கும் புலம்பலுக்கும் கொண்டுவிடும்.

### **“உறுதி கூறப்பட்டிருக்கிற அடையாளங்களும் புலம்பலும் ஓர் இரண்டாவது பிறப்பை முந்தும்.”**

“ஒரு இரண்டாவது பிறப்பையும்” மேசியாவின் ராஜ்யம் ம்னுக்குலத்துக்குக் கொண்டுவரப்போகிற எல்லா மகிமையான ஆசீர்வாதங்களையும் மனுஷர் அறியாதிருக்கிறதினால் அவர்கள் அதிகமாக பயம் நிறைந்தவர்களாவார்கள் (1தெச 5:1-5). ஆனால் உண்மையான தேவனுடைய தெரிவிக்கப்பட்டிருப்பதால், தங்களுடைய “மீட்பு சமீபமாயிருக்கிறது” என்று அறிந்து அவர்கள் மாத்திரமே தங்கள் தலைகளை உயர்த்தி சந்தோஷப்படுவார்கள் (லூக் 21:28).

### **“வானங்கள் வெந்து அழிந்துபோகும்”**

ஜுவாலித்து எரிகிற அக்கினியில் வெளிப்படுகிற வானங்களில் தோன்றுகிற இந்த மனுஷகுமாரனுடைய அடையாளத்தை, அதாவது வானங்கள் வெந்து அழிந்து போவதை பரி.பேதுரு விவரிக்கிறார் என்பது தெளிவாகிறது. அவருடைய வார்த்தைகளாவன : “வானங்கள் வெந்து அழிந்து”, “பூமியும் (அக்கினிக்கு இரையாகி) அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போகும்.” (2பேது 3:10-12). இப்படி விவரிக்கப்பட்டிருப்பது, உலகம் முழுவதிலும் சொல்லர்த்தமான அக்கினி ஏற்பட்டு சொல்லர்த்தமான பூமி அழிந்துவிடும் என்பதைக்குறிக்கிறது என்று நம்முடைய முற்பிதாக்கள்

எண்ணியிருந்த அந்த தவறை நாமும் செய்யாதிருப்போமாக. அதற்கு மாறாக, அடையாளமான வானங்களும் அடையாளமான பூமியும் அக்கினிக்கு இரையாகி மாபெரிய குழப்பத்தில் அழிந்துவிடும். அப்போது பௌதீக பூமி இப்போது இருக்கிற பிரகாரமாகவே இருக்கும். புதிய இராஜாவும், இழந்து போன எல்லாவற்றையும் திரும்பக் கொடுக்கிறவருமான கிறிஸ்துவுக்கு (தலையும் சபையும்) கீழாக இழந்து போனவைகள் திரும்பக் கொடுக்கப்படும். அப்பொழுது ஜனங்கள் இந்த புதிய ஏற்பாட்டிற்குள் வந்து, இப்பூமி மாற்றி புதிதாக்கப்படும் செல்வாக்கை அனுபவிக்க ஆரம்பிப்பார்கள்.(தானி 7:13,14,18,22,27; அப் 3:19-21; செப் 3:18,19).

இயேசு இவ்விஷயத்தில் சொன்ன அதே வரிசையில் "அக்கினி" பூமியை அடைவதற்கு முன்பே, அது வானங்களுக்கு வருகிறதாக பரி.பேதுரு குறிப்பிடுகிறார். நியாயத்தீர்ப்பின் ஜுவாலித்து எரிகிற அக்கினியின் அடையாளம் அதாவது வெளிப்படுதல், முதலாவது வானங்களில் தோன்றும். பிறகு நியாயத்தீர்ப்பில் மனுஷகுமாரனது அடையாளம் பாவமுள்ள, சுயநலமுள்ள, அநீதியான எல்லாவற்றிலிருந்தும் மனுஷரை தூய்மைபடுத்தும் நோக்கத்தோடு பூமியின் விவகாரங்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கிக் கொண்டிருப்பது காணப்படும். "பூதங்கள் வெந்து உருகிப்போம்" என்று நமக்கு சொல்லப்படுகிறது. முதலாளித்தன்மையுள்ள சக்திகளும், தொழிலாளர் சக்தியும் மற்ற சக்திகளுமே இப்பூதங்கள். 1914ல் இயற்கையாகவே இவைகள் எரிய ஆரம்பித்தன. அநேக சக்திகள் ஏற்கனவே உருகிவிட்டன. மற்றவைகள் உருகிக்கொண்டிருக்கின்றன. உருகுதல் இன்னமும் தொடரும். அழிவின் அக்கினி அவ்வளவு தாங்க முடியாததாக இருக்கப் போவதாலும், அதன் பலன்கள் வன்மையாக இருக்கப்போவதாலும், அந்த நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போக மாட்டான்.(மத் 24:21,22; ஏசா 24:6).

இயேசுவும் அவருடைய மகிமைப்படுத்தப்பட்ட சபையும் குறுக்கிடப்போவத்தின் காரணமாகவும், இராஜ்யம் சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்படப்போகிற காரணத்தாலும் அந்நாட்கள் குறைக்கப்படும். அதாவது முடிவுக்குக் கொண்டு வரப்படும். அந்த தெய்வீக நியாயத்தீர்ப்புகளின் ஜுவாலித்து எரிகிற அக்கினியினால் உலகம் முழுவதிலும் ஏற்படப்போகிற விளைவுகள், உலகக்காரியங்களை திருத்தி சரிப்படுத்தக்கூடியவையாய் இருக்கும். அது கெடுதி உண்டாக்குகிறவைகளை அழித்துவிடும், கர்த்தர் கொடுக்கிறதற்காக ஆயத்தம் செய்திருக்கிற ஆசீர்வாதங்களைப்பெற மனுஷரின் இருதயங்களை தயார் செய்யும், இவ்விதமாகவே எழுதப்பட்டிருக்கிறது. உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்துக் குடிகள்

நீதியைக்கற்றுக்கொள்ளுவார்கள் (ஏசா 26:9). இப்பொழுதிருக்கிற வானமும் (மதங்கள் சம்பந்தமான வானம். தேவனுடைய இருப்பிடம் அல்ல). இப்பொழுதிருக்கிற பூமியும் (இப்பொழுதிருக்கிற மனுஷரின் சமுதாய ஒழுங்குகளும்) அகன்று போகும். இல்லாமல் போகும். வெளி 21 : 1 உடன் ஒப்பிட்டுப்பார்க்கவும்.

வானங்கள், அதாவது மத சம்பந்தமான அதிகாரங்கள் முதலில் அக்கினிக்கு இரையாகும் என்றும், பிறகு பூமி, அதாவது அரசியல், நீதி, சமுதாய ஏற்பாடுகள் கொண்ட சமுதாயமும் சிக்கிக் கொள்ளும் என்றும் பரி.பேதுரு மகா உபத்திரவத்தைப்பற்றி பேசும்போது குறிப்பிடுகிறார். இதற்கு இணக்கமாக, ஜுவாலித்து எரிகிற அக்கினியில் மேசியா வெளிப்படுதலின் அடையாளம் முதலாவது இப்பொழுதிருக்கிற கிறிஸ்தவ மத ஒழுங்குகளான வானத்திலிருக்கும் என்று நமது மூல வாக்கியம் சொல்லுகிறது. மேலும், பரி.பேதுருவுடைய கூற்றுக்கு ஒத்தாற்போல சமுதாய ஒழுங்கு முற்றிலுமாக அக்கினியினால் அழிக்கப்படுமுன் கிறிஸ்தவ மதங்கள் சம்பந்தமான வானங்கள் பெரிய கூக்குரலோடு அகன்றுபோகும். அதாவது, கிளர்ச்சி, குழப்பத்தில் அகன்று போகும் என்பதை நாம் எதிர்பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம் (2பேது 3:10).

இதே கருத்து வெளிப்படுத்தின விசேஷத்திலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே பாபிலோன் என்று அழைக்கப்படுக்கிற (பாபிலோன் என்றால் குழப்பம் என்று அர்த்தம்) பேர் சபையின் பிரிவுகளுக்கும் உண்மையான சபைக்கும் ஊடேயுள்ள பெரிய வித்தியாசம் காண்பிக்கப்பட்டிருக்கிறது. உண்மையான சபை பாபிலோனை விட்டு வெளியேறி கிறிஸ்து மூலமாக தேவனோடு நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொள்ள முன் கூட்டியே எச்சரிக்கையாய் செயல்படுகிறது. நியாயத்தீர்ப்புகள் பாபிலோன் மேல் வருவதற்கு முன்பு யுகத்தின் முடிவிற்குரிய இந்த பொதுவான அழைப்பு அறிவிக்கிறதாவது “நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள்.” உண்மைபற்றுடன் கீழ்ப்படிகிறவர்கள் அவள் மேல் வரப்போகும் வன்மையான மகா உபத்திரவத்தில் சிக்கி கொள்ளாதவாறு பாபிலோனை விட்டு வெளியேற ஏவப்படுகிறார்கள் (வெளி 18:4,5; ஏசா 52:11).

‘பாபிலோன்’ என்ற சொல்லை தனிப்பட்டவர்களுக்கு உபயோகிக்கக் கூடாது. ஆனால் வெளிப்படையாக தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து ஆனால் வேதாகமத்தின் உண்மையான போதனைகளான தேவனுடைய குணத்தையும் தெய்வீக ஏற்பாட்டையும் தவறாக அறிவித்துக்கொண்டு,

ஆவிக்குரிய காரியங்களில் குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருந்து உலகின் அரசாங்கங்களோடு இணைந்திருக்கிற பெரிய கிறிஸ்தவ மத சம்பந்தமான ஸ்தாபனங்களுக்கு 'பாபிலோன்' என்ற சொல்லை உபயோகிக்க வேண்டும். சந்தேகமின்றி/ இந்த ஸ்தாபனங்களில் அங்கங்களாக இருக்கிறவர்களுக்குத் தங்களுடைய பதவி, அறிவு பிரகாசிக்கப்பட்டிருக்கிற நிலை இவைகளுக்கு ஒத்தாற்போல் பொறுப்பு உண்டு. இந்த அளவில் இந்த தனிப்பட்டவர்களுக்கு பாபிலோனின் வீழ்ச்சியில் கூட்டாக உபத்திரவங்களில் பங்கு கிடைக்கும்.

'பாபிலோன்' என்ற பதம் வேதவாக்கியங்களின்படி குறிப்பிட்ட ஒரு பிரிவுக்கோ, ஒரு கட்சிக்கோ உபயோகிக்கப்படுகிறதாக நாங்கள் கருதவில்லை. ஆனால் சரியாக கூறுமிடத்து, இப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் மதபிரிவுகளின் பொதுவான சேர்க்கைக்கு உபயோகிக்கப்படுகிறது. அவ்வாறே, பாபிலோனுக்கு ஏற்படப்போகிற முழு அழிவைக்குறித்து வாசிக்கும்போது, இந்த ஸ்தாபனங்களையும் இந்த ஸ்தாபனங்களோடு சம்பந்தப்பட்டு அவைகளில் அடிமைகளாக இருக்கிற தனிப்பட்டவர்களையும் வித்தியாசப்படுத்தி கவனிக்க வேண்டும். கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கள் மனுஷரை நசுக்கி அழிக்கத் திட்டமிடப்படவில்லை. ஆனால் மனுஷர்கள் தேவனைப் பற்றி அறிகிற அறிவிலும் தேவனுடைய தயவிலும் முன்னேறாதபடி விருத்தியடையாதபடி செய்கிற தப்பான உபதேசங்கள், அடிமைத்தனம், மூடநம்பிக்கை இவைகளின் ஏற்பாடுகளை (ஸ்தாபனங்களை) முற்றிலுமாக அழிக்கவே கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கள் திட்டமிடப் பட்டிருக்கின்றன.

இந்த மாபெரிய ஸ்தாபனங்களின் (பாபிலோன், குழப்பம்) வீழ்ச்சிக்குப் பிறகு, மனுஷருடைய அறிவின் கண்கள் திறக்கப்படும். 'குருடர்' இருளுக்கும் அந்தகாரத்துக்கும் நீங்கலாகி காண்பார்கள் (ஏசா 29:18). அதன் பலனாக அவர்களும் வெளி 19:1-9 உள்ள செய்தியை அறிவிப்பதில் ஒன்றுசேரும்போது தேவனை உயர்த்தும் துதி அதிகமாக சுகந்தவாசனையாக எழும்பும். பாபிலோனின் வீழ்ச்சி துரிதமாகவும் திடீரென்றும் ஏற்படப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது - மறை பொருளாக ஒரு மணி நேரத்தில் (வெளி 18:17) என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவளுடைய வீழ்ச்சியைக் குறித்து பலவிதமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. அக்கினியினால் அவள் சுட்டெரிக்கப்படுவாள் என்று வெளி 17:16; 18:8 வாக்கியங்களில் பார்க்கிறோம். இந்த உபத்திரவத்தையும் அழிவையும் பற்றி எழுதும்போது பரி பேதுரு அதே அக்கினியின் அடையாளத்தை உபயோகிக்கிறார். பெரிய ஏந்திரக்கல்லை சமுத்திரத்திலே எரிந்து விடுவதைப்போல பாபிலோனுக்கும் சம்பவிக்கும் (வெளி 18:17-2; எரேமி 51:58, 61-64).

## கண்கள் யாவும் அவரைக் காணும்

சுவிசேஷ யுகம் முழுவதிலும் தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய விசுவாசத்தின் கண்களினால் இயேசுவை தங்களுடைய இரட்சகராகவும் மீட்பராகவும் அடையாளம் கண்டு கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒப்பிட்டு பார்க்கும்போது, இப்படிப்பட்ட விசுவாசத்தையும் அறிவையும் கொண்ட கண்களை மனுஷரில் வெகு சிலரே உடையவர்களாக இருக்கிறார்கள்.(2தெச 3:2; மத் 13:16,17) பரி.பவுல் சொல்லுகிறது போல, பெரும்பான்மையோர் சாத்தானாலும் தப்பான உபதேசங்களினாலும், குருடாக்கப்பட்டு கிறிஸ்துவைப் பற்றிய சரியான உண்மையான அபிப்பிராயத்தைப் பெற தவறிப்போனார்கள். 'இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்' எல்லா அவிசுவாசிகளுடைய மனதின் கண்களையும் குருடாக்கினான் என்று அவர் சொல்லுகிறார். ஆனால் எல்லாருடைய கண்களும் குருடாக்கப்பட்ட கண்களும் திறக்கப்படும் என்று தேவனுடைய இரக்கமுள்ள வாக்குத்தத்தம் அறிவிக்கிறது. (2கொரி 4:4-6; ஏசா 35:5; யோவா 1:9).

பத்தொன்பது நூற்றாண்டுகால அனுபவங்கள் உலகமக்களின் கண்களைத் திறப்பதில் மிகவும் சிறிதளவே வெற்றியடைந்திருக்கிறது. ஆனால் மேசியா ஜுவாலித்து எரிகிற அக்கினியில் வெளிப்படுவது உலகத்தாரின் கவனத்தை விரைவில் இழுக்கும். கண்கள் யாவும் அவரை காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்(வெளி 1:7; சகரி 12:10) என்ற சொல்லியிருக்கிற பிரகாரமாகக் கண்டு கொள்வார்கள். சுபாவமாகவே அவருக்கு பயப்படுவார்கள். யாருக்கு பயந்தார்களோ அவரே தங்களுடைய மிகச் சிறந்த நண்பன் என்றும் ஈடுபலியாகத் தன் ஜீவனை தங்களுக்காக கொடுத்தவர் என்றும் அறிவார்கள். அவருடைய நியாயத்தீர்ப்புக்கள் பூமியின் மேல் நடக்கப்போவதின் நோக்கமே, பயம், அறிவீனம், மூடநம்பிக்கை, தப்பான உபதேசங்கள், பாவம், சுயநலம், அநீதி இவைகளின் கட்டுக்களை முறித்துப்போட்டு அதிகக் காலமாக தங்களை கீழ்படுத்தி வைத்திருந்த பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு சுதந்திரமாக முழு உலகமும் நடக்க சாத்தியமாக்குவதற்கே என்றும் அறிவர். இவ்விதம் அறிவுறுத்தப்பட்டு இணையச்செய்ய அவர்களுக்கு அதிக காலம் வேண்டியதாயிருக்கும் (ரோம 8:19-21, 11:25-27).

தேவனுடைய கோபத்தின் அக்கினி (செப் 3:8,9) யாருக்காக கிறிஸ்து மரித்தாரோ, அவர்களுக்கு விரோதமாகப்பற்றி எரிகிறதில்லை என்றும், ஆனால், அவர்களுடைய பாவங்களுக்கு எதிராக மாத்திரமே பற்றி எரியும் என்பதையும் ஏற்ற காலத்தில் அவர்கள் கற்றுக் கொள்வார்கள்.

இந்தப்பாடத்தின் படிப்பினை அவர்களுடைய அறிவின் கண்களை இன்னமும் விசாலமாகத் திறந்து, தேவனுடைய மிகப்பெரிய அன்பின் நீளம், அகலம், உயரம், ஆழம் இவைகளின் சிறிதளவையாவது காண அவர்களை சாத்தியமாக்கும் (எபே 3:14-19; ரோம 5:6-8).

விசேஷமாக மகா உபத்திரவம் முடியும் சமயத்தில் யூதர்கள் பெருந்துன்பத்துக்குட்படுவார்கள். அதுவே 'யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம், ஆனாலும், அவன் அதற்கு நீங்கலாக்கி இரட்சிக்கப்படுவான்' (எரேமி 30:7; எசே 38:39). சுவிசேஷயுக சபை அப்பொழுது பூர்த்தி செய்யப்பட்டு தங்களுடைய இவ்வுலக ஓட்டத்தை முடித்திருப்பார்கள். தேவனுடைய தயவு சுபவ இஸ்ரவேலருக்கு அதிகமாக கிடைக்கும். அந்த விசேஷ தயவு வெளிப்படுவதற்குரிய அக்காலம் யாக்கோபின் உபத்திரவத்தின் மிகவும் இருண்ட நாட்களாக இருக்கும். அப்பொழுது, யூதர்கள் தங்களுடைய விரோதிகளால் சூழப்பட்டிருப்பார்கள். அவர்கள் மனந்திரும்பும்போது உபத்திரவத்திலும் அதன் மூலமாகவும் கர்த்தர் அவர்கள் மேல் கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவார். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின அவரை நோக்கிப்பார்ப்பார்கள் (சக 12:10).

பாவிகளின் சிநேகிதனும், அதிக காலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த மேசியாவுமானவரை தாங்கள் சிலுவையில் அறைந்தது மாபெரும் பயங்கரமானது என்பதைக் கண்டு கொள்ளுவார்கள். அவர்கள் அவர் நிமித்தமாகப் புலம்புவார்கள் என்றும், பிறகு அவர்களுக்கு விண்ணப்பங்களின் ஆவி வருமென்றும், அவரை அவர்கள் உண்மையான குணத்தில் காண்பார்கள் என்றும் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அச்சமயத்தில், இஸ்ரவேலரின் சார்பாக தெய்வீக தயவு விசேஷமாக வெளிப்படும். பூர்வ நாட்களில் நடந்ததுபோல கர்த்தர் அவர்களை விடுவிப்பார். அவர்களுடைய அறிவின் கண்களும் விசுவாசத்தின் கண்களும் அதிக அதிகமாக திறக்கப்பட்டு இயேசுவை தங்களுடைய மேசியாவாக அடையாளம் கண்டுகொண்டு அவரை ஏற்றுக்கொள்ளுவார்கள். முடிவாக, வேதாகமம் சொல்லுகிற பிரகாரமாக, தேவனண்டைக்குத் திரும்புகிற மனுப்புத்திரருக்கு அவர்கள் தலைவர்களாவார்கள். தேவன் அவர்களுடைய அக்கிரமங்களை எல்லாம் தாராளமாக மன்னித்து அவருடைய இராஜ்ஜியத்தில் கிடைக்கப்போகிற ஆசீர்வாதங்களில்முக்கியமான பங்கையும் அவர்களுக்கு கொடுப்பார். (எரேமி 31:31-34; எபி 8:7-13).

அந்த பெரிய மேசியாவின் அரசாங்கம் ஜனங்களை கண்டிக்காது இருக்காது. உலகத்தார் நீதியில் திருந்துவதற்காக அவர்களுக்குத் தண்டனைகளை கொடுக்கும். (வெளி 2:26, 27).

எஜமான் சொல்லியிருக்கிற பிரகாரம், சிலர் அதிகமாகவும் சிலர் கொஞ்சமாகவும் தண்டனைகள் அனுபவிப்பார்கள். நீதியின் தத்துவங்களைப் புரிந்துகொண்டு வேண்டுமென்றே அவைகளை மீறுகிறவர்கள் 'அநேக அடிகளால்' மிகவும் அடிக்கப்படுவார்கள். அப்பொழுது, உதாரணமாக, சிறிதளவு அறிந்திருக்கிற புற மதஸ்தாரைப்போன்றவர்கள், தங்களுடைய அறிவீனத்திற்கு ஒத்தாற்போல சில அடிகளால் அடிக்கப்படுவார்கள். அக்கிரமக்காரர் தங்களுடைய அநீதியின் வழிகளை விட்டுவிட்டு நீதியின் பாதைகளில் நடக்க, அவர்களை உற்சாகப்படுத்தவும் அவர்களுக்கு உதவவுமே எல்லா அடிகளும் திருத்தக் கூடியவைகளாக இருக்கும். (லூக் 12:47, 48).

பூமியிலுள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு அந்நாள் ஒரு சந்தோஷமான நாளாக இருக்கும். ஒரு ஆயிரம் வருஷங்கள் கொண்ட நாளாக இருக்கும். ஏனென்றால் கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலிருக்கிறது. (2பேது 3:8). எவ்விடத்திலும் தெய்வீகக் கிருபையும் நீதியும் இயங்கிக் கொண்டிருப்பதற்குரிய சான்றுகள் காணப்படும். மனுஷர் தங்களுக்குத் தேவைப்படுகிற படிப்பினைகளை துரிதமாகக் கற்றுக்கொள்ளுவார்கள். மனிதருடைய விவகாரங்களையும் நிலைமைகளையும் அதிசயமாக மாற்றிவிடும். தேவனுடைய சித்தத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு கீழ்படியும்போது, தேவனுடைய ஆசீர்வாதம் மனுஷர்மேல் பொழியும்.

முடிவாக, ஆயிரம் ஆண்டு யுகத்தின் முடிவில் (வெளி 20:7-9) எல்லா பாவமும் நீக்கப்பட்ட பிறகு, எல்லா அபூரணமும் மறைந்த பிறகு, எல்லா அக்கிரமக்காரரும் அழிக்கப்பட்ட பிறகு வானத்திலும் பூமியிலும் எல்லா சிருஷ்டிகளும், சிங்காசனத்தின் மேல் "வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும்" ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லுவது கேட்பப்படும் (வெளி 5:13) பிறகுதான், பரலோகத்தில் தேவனுடைய சித்தம் செய்யப்படுவது போல பூமியிலேயும் அவருடைய சித்தம் செய்யப்படும். ஏனென்றால், சோதிக்கப்பட்ட தேவனுடைய சித்ததின்படி செய்ய தகுதியுள்ள ஒரு பூரண மனுக்குலம் அப்போதுதான் ஏற்பட்டிருக்கும். அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவது எல்லாருக்கும் மகிழ்ச்சியான காரியமாக இருக்கும்.

கிறிஸ்து மூலமாக தேவனுடைய தயவை ஏற்றுக்கொள்ளவும் தேவனுடைய சித்தத்துக்கு மனப்பூர்வமாய் கீழ்ப்படிந்து தங்களுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கவும் இதுவே தகுந்த காலம் என்பது இப்பொழுதுள்ள தேவனுடைய ஜனங்களுக்குரிய ஒரு விசேஷ

பாடமாக இருக்கிறது. இவ்விதமாக, கிறிஸ்தவ மதங்கள் சம்பந்தமான வானங்கள் கலைக்கப்படுவதில் மனுஷ குமாரனுடைய அடையாளத்தைக் கண்டு புலம்புகிற உலகத்தாரில் நாம் ஒரு பாகமாக இருக்க மாட்டோம். அழிக்கப்பட போகிற கிறிஸ்தவ மதங்கள் சம்பந்தமான வானங்களில் ஈடுபட்டிருக்கவும் மாட்டோம். (2பேது 3:11-13) சரியாகக் கூறுமிடத்து, இயேசுவின் சீஷர்களாக அவருடைய அடிச்சுவடுகளில் நடப்பதும், நியாயத்திற்கு ஆதரவளிப்பதும் பரிசுத்த ஆவியால் நடத்தப்படுவதும் 'பாபிலோனை விட்டு வெளியே வருவதும்' பரிசுத்தமில்லாதவைகளைத் தொடாமலிருப்பதும், பிதாவோடும் அவருடைய குமாரனாகிய நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவோடும், பரிசுத்த அப்போஸ்தலரோடும், எல்லா உண்மையுள்ள தியாகிகளோடும் மற்ற எஜமானை பின்பற்றுகிறவர்களோடும் நெருங்கிய சம்பந்தமும் ஐக்கியமும் கொண்டவர்களாக இருப்பதும் நமக்குக் கிடைத்திருக்கிற சிலாக்கியமாகும் (1யோவா 1:3).